Registered as a News Paper in Sri Lanka: பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (17 - 01 - 1991) வியாழக்கிழமை ஓசை: 333


## ஐந்தாம் ஆண்டிற்கு விசேட புலமைப்பரிசில் பரீட்சை?

(யாழ்ப்பாணம்)

கல்வியமைச்சினால் நடாத்தப்படும் 5 ஆம் ஆண்டுக்குரிய புலமைப்பரிசிற் பரீட்சைக்குச் சமமான பரீட்சையொன்றை யாழ். மாவட்டத்தில் நடாத்துவதற்கு யாழ். கல்வித் திணைக்களம் முயற்சி எடுத்து வருகின்றது. சென்ற ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவேண்டிய 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை இதுவரை நடாத்தப்படாததனாலேயே இந்நடவடிக்கை (4ஆம் பக்கம் பார்க்க)

இவை கடந்த திங்கட்கிழமை விடுதலைப்புலிகள்கைதுசெய்த பொலிசாரை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தபோது எடுக்கப்பட்ட படங்கள் ஆகும். முதலாவது படம் விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ராஜன், சர்வதேசசெஞ்சிலுவைச்சங்க அதிகாரியுடன்உரையாடுவதையும், இரண்டாவது படத்தில் ஒப்படைக்கப்பட்ட சடலத்தை செஞ்சிலுவை அதிகாரி பொறுப்பேற்பதையும், மூன்றாவது படத்தில் விடுவிக்கப்பட்ட பொலிசாருடன் செஞ்சிலுவை அதிகாரி உரையாடுவதையும் காணலாம்.







## கல்வியைச் சீரழிக்கும் சிறிலங்காவை கண்டித்து

# மாணவரின் மாபெரும் சைக்கிள் பேரணி!

## இராணுவத்தின் முயற்சி கட்டுவனில் முறியடிப்பு

(கட்டுவன்)

கட்டுவனில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் புலிகளின் காவல் அரணை நோக்கி முன்னேறி புலிகளின் எதிர்த்தாக்குதலினால் பின்வாங்கியுள்ளனர்

நேற்று காலை 9-30 மணியளவில் புலிகளின் கட்டுவன் காவலரணை நோக்கி முன்னேறிய இராணுவத்தினரை எதிர்த்து "அருள்89" தாக்குதலை விடுதலைப் புலிகள் தொடுத்தனர்

புலிகளின் கடுமையான எதிர்த்தாக்குதலை எதிர்கொள்ள முடியாத இராணுவத்தினர் பின்வாங்கி முகாமினுள் முடங்கிக்கொண்டனர். (அ)

## விமானத் தாக்குதல்

(ஆனையிறவு)

ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா விமானப் படை

## தாழங்குடாவில் 5 தமிழர் இராணுவத்தால் கைது

# மாணவரின் மாபெரும்

# சைக்கிள் பேரணி!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர்களின் கல்வியைச் சிரழிக்க சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கையைக் கண்டித்து மாபெரும் துவிச்சக்கர வண்டிகள் ஊர்வலம் ஒன்றை யாழ். மாவட்ட மாணவர் ஒன்றியம் நடத்தியது.

சுன்னாகத்தில் இருந்து யாழ். செயலகம் வரை நடைபெற்ற இவ் ஊர்வலத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் துவிச்சக்கர வண்டிகளுடன் கலந்து கொண்டனர். இந்த ஊர்வலம் ஒன்றரை மைல் நீளம் வரையில் நீண்டிருந்தது.

சிறிலங்கா அரசின் தொடர்ச்சியான பொருளாதாரத் தடை, இராணுவ மற்றும் விமானத் தாக்குதல்கள், கிழக்கு மாகாணத்தில் மாணவர் ஆசிரியர் மீதான அழிப்பு நடவடிக்கை என்பனவற்றைக் கண்டித்தே இவ் ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ் ஊர்வலத்தில் "தென் தமிழீழ மாணவர் காட்டில்" "சிங்கள முஸ்லிம் காடையர் நாட்டில்" "சிங்கள பாடசாலையில் உயர்தரபரீட்சை" "தமிழீழ பாடசாலை மீது பீப்பாக் குண்டு" "தமிழீழ மாணவர் கல்வியை அழிக்க சிங்கள அரசு மாபெரும் திட்டம்" "உலக நாடுகள் உறக்கம் ஏனோ? சிங்கள அரசின் கொடுமையைக் கண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மாணவர்களின் கல்விக்கு சகல முயற்சியும் செய்வேன்

- சுந்தரலிங்கம்

(யாழ்ப்பாணம்)

"தமிழ் மாணவர்களின் அழிக்க முடியாத ஒரே பொதுச் சொத்து கல்வியே ஆகும். இக்கல்வியை எமது மாணவர்கள் எவ்வித தடையுமின்றித் தொடர்வதற்கு எந்த சக்தியையும் எதிர்கொள்ள நான் தயாராகவுள்ளேன் மாணவர்களின் கல்வி மேன்மைக்காக என்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்வேன்."

நேற்றைய தினம் சுன்னாகத்தில் இருந்து ஊர்வலமாக வந்த பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் சார்பில் கைய

(4ஆம் பக்கம் பார்க்க)

## பொதுசன தொடர்பு அதிகாரி கதிரை நீண்ட காலமாகக் காலி

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களத்தில் பல மாத காலமாகப் பொதுசனத் தொடர்பு அதிகாரியின் கதிரை காலியாக உள்ளது. பொதுசனத் தொடர்பு அதிகாரி என்ற வாசகம் எழுதப்பட்ட கட்டை ஒன்று மாத்திரம் அவர் மேசையில் மாமூல்படி வைக்கப்பட்டிருந்தது அந்தக் கட்டையும் இப்போது மாயமாய் மறைந்துவிட்டது.

ஆசிரியர்களுக்கும், பொது மக்களுக்கும் பல பொருத்தமான ஆலோசனைகளை வழங்கி உதவ வேண்டிய இந்த அதிகாரியை ஆசனத்தில் காணாமல் பலர் கஷ்டப்படுகிறார்களாம். கல்வித்திணைக்களத்துக்கு வருகைதரும் ஆசிரியர்களும், மற்றவர்களும் விசாரணைகளை மேற்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வெளியேறிய இராணுவம் புலிகள் முல்லைத்தீவில் மோதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சிறிலங்கா முகாமில் இருந்து முன்னேறிய இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் நடாத்திய கடும் தாக்குதலையடுத்து படையினர் பலத்த இழப்புடன் பின்வாங்கி முகாம் திரும்பினார்கள் இம் மோதலில் இரு போராளிகள் வீரமரணத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### சந்துரு, உக்கிளாஸ்

முல்லைத்தீவில் இடம்பெற்ற மோதலில் சந்துரு (ம. யோகரட்ணம் விஸ்வமடு குளத்தடி, முல்லைத்தீவு), உக்கிளாஸ் (ச. சந்திரன் இரணைமடு சந்தி பாரதிபுரம்) ஆகிய இரு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (க)

## கட்டுவனில் முறியடிப்பு

(கட்டுவன்)

கட்டுவனில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் புலிகளின் காவல் அரணை நோக்கி முன்னேறி புலிகளின் எதிர்த்தாக்குதலினால் பின்வாங்கியுள்ளனர்

நேற்று காலை 9-30 மணியளவில் புலிகளின் கட்டுவன் காவலரணை நோக்கி முன்னேறிய இராணுவத்தினரை எதிர்த்து "அருள்89" தாக்குதலை விடுதலைப் புலிகள் தொடுத்தனர்

புலிகளின் கடுமையான எதிர்த்தாக்குதலை எதிர்கொள்ள முடியாத இராணுவத்தினர் பின்வாங்கி முகாமினுள் முடங்கிக்கொண்டனர். (க)

## விமானத் தாக்குதல்

(ஆனைவிழுந்தான்)

ஆனைவிழுந்தான் பகுதியில் சிறிலங்கா விமானப் படையின் சீ-பிளேனில் இருந்து பரவலாக துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் இப்பகுதியில் சீ-பிளேன் ஒன்று காலை 8.00 மணி முதல் சுமார்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தாழங்குடாவில் 5 தமிழர் இராணுவத்தால் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தாழங்குடா என்ற கிராமத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் இப்பகுதியில் இருந்து ஐந்து அப்பாவித்தமிழர்களை கைது செய்துள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை செட்டிபாளையம் இராணுவ முகாமில் இருந்து வெளியேறிவந்த இராணுவத்தினர் மேற்படி கிராமத்தைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தி ஐந்து அப்பாவி ஆண்களைக்கைது செய்து முகா

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. காலக்கெடு முடிந்தது; போருக்கான இறுதி ஆயத்தங்கள்

வளைகுடாப் பகுதியில் படைகள் போர்க்கோலம் பூண்டு வியூகம் வகுத்து நிற்கும் வேளையில், ஐக்கிய நாடுகளின் ஜனவரி 15 காலக்கெடு போரை மேற்கொள்வதற்கான ஒரு காலக்கெடு அல்ல என்று வாஷிங்டனில் நேற்று வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது. இதேவேளை ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசைனின் நிலையில் எவ்வித மன மாற்றமும் இல்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)

### அணு ஆயுதம்

## ஈராக் பாவித்தால் நாமும் பாவிப்போம்

- லக்கிளர் ஹேட்

(லண்டன்)

பக்தாத் அணுவாயுதங்களைப் பாவிக்கும் பட்சத்தில் தாங்களும் பதிலடியாக அணுவாயுதங்களைப் பாவிக்கவிருப்பதாக இங்கிலாந்து வெளியுறவுச் செயலாளர் லக்ளர் ஹேட் நேற்று லண்டனில் தெரிவித்ததாகக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை வளைகுடாவில் பல்லினப் படைகளும் யுத்தத்தை மேற்கொள்ளத் தயார் என்று பல்லினப் படைகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வோதயத்திற்கு நிதி வழங்க வெளிநாட்டு நிறுவனங்கள் மறுப்பு

(திருக்கோணமலை)

இலங்கை சர்வோதய நிறுவனம் தனது இனவாதப் போக்கை கைவிட்டு சகல மக்களுக்கும் இனப் பாகுபாடு அற்ற முறையில் தனது சேவையைச் செய்யாத வரையில் தாம் இந்நிறுவனத்துக்கு நிதி உதவி வழங்கப் போவதில்லை என இந்நிறுவனத்திற்கு உதவி வழங்கும் நாடுகளான நெதர்லாந்தும், கனடாவும் அறிவித்துள்ளன.

குறிப்பாக நாட்டின் வடகிழக்குப் பகுதிகளுக்கு இந்நிறுவனத்தின் பொறுப்பாளராக சிங்களவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதால் இப்பகுதியில் வாழும் தமிழர்கள் இந்நிறுவனத்தினால் புறக்கணிப்புச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

வெளிவந்துவிட்டது

வர்த்தகமும் நிதியும்-உயர்தர வகுப்புகளுக்குரியது: உள் நாட்டு வியாபாரம்' வெளிநாட்டு வியாபாரம், உற்பத்தி வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் ஆகியவற்றுடன் வெளிவந்துவிட்டது: தொகுப்பு:தேவராஜன் ஜெயராமன் B Com (Hons) விலை ரூபா 8/- வெளியீடு விற்பனை; பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(B/1804)

## தாச்சி சுற்றுப்போட்டி

(நமது நிருபர்)

யாழ். மாவட்ட ரீதியிலான தாச்சி சுற்றுப் போட்டியொன்று நடைபெறவுள்ளது: சனசமூகநிலையங்கள், விளையாட்டுச் சழகங்களுக்கிடையிலான இச்சுற்றுப்போட்டியை அரியாலை காந்தி சனசமூக நிலையம் ஏற்பாடு செய்துள்ளது. இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் மாசி மாதம் 5ஆம் திகதிக்கிடையில் செயலாளர், காந்தி சனசமூக நிலையம், அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டப்படுகின்றது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் தோற்றம்: 23 — 11 — 1959

விண்ணில் மாற்றம்: 18 — 12 — 1990

### செல்வி வீரசக்தி கலாநிதி

கண்மணி என்னும் எங்கள்
கலாநிதி மறைந்தாயம்மா!
உன்னரும் உருவம் எங்கள்
உள்ளத்தில் ஓவியம் போல்
கண்ணீரின் வடிவமாக
கசிந்து நாம் உருகுகின்றோம்
அன்பினால் சிறந்து எங்கள்
ஆருயிர் போல வாழ்ந்து
பண்பினில் சிகர மாகிப்
பாதியில் மறைந்த தென்ன?
தன்னிகரில்லாத் தாயே
தவிக்கின்றோம் காண்ப தெப்போ?

பிரிவால் துயருறும்

மாமூலை, முள்ளியவளை, முள்ளைத்தீவு: தந்தை, தாய், சகோதரர்கள், மருமக்கள், மக்கள், உற்றார், உறவினர்கள்.

(R. 1036)

## இதழ் ஓசை!

"இதழ் ஓசை" என்னும் கையெழுத்துச் சஞ்சிகையின் வெளியீட்டு விழா கடந்த பொங்கலன்று நடைபெற்றது. நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலைய கல்விக்குழுவினரால் இச் சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது. நிலையத்தின் உப தலைவர் திரு வை. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் கல்வி அதிகாரி திரு வேலாயுதம் அவர்கள் பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டார்.


## படிப்பகம் திறப்புவிழா

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த குரும்பசிட்டி மாணவர்களின் நலன் கருதி கனகம் மயிலணியில் அமைக்கப்பட்டுள்ள அமரர் இராசரத்தினம் ஞாபகார்த்த படிப்பகத்தை இலங்கைத் திறந்த வெளிப்பல்கலைக்கழக விரிவுரையாளர் பொன். பூலோகசிங்கம் திறந்து வைத்தார்; கடந்த பொங்கலன்று நடந்த இவ்வைபவத்திற்கு குரும்பசட்டி சன்மார்க்கசபைத்தலைவர் கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமை வகித்தார். மேற்படி படிப்பக ஏற்பாட்டாளர் பொன். பாலகுமார் வரவேற்புரை நிகழ்த்தினார்.

## மாணவர் தடுமாற்றம்

ஆரியகுளத்தில் இருந்து யாழ். மாநகர சபையினால் நுளம்பின் பெருக்கத்தைக் குறைப்பதற்காக அங்கு வளரும் தாவரங்கள் அகற்றப்படுவது தெரிந்ததே மாநகர சபையினரால் அத் தாவரம் சல்வீனியா எனப் பெயரிடப்பட்டு பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது இது தாவரவியல் கற்கும் மாணவர்களுக்கு பெருங் குழப்பத்தை ஏற்படுத்திவருகின்

## வீர அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



ஜனனம்: 30 - 03 - 1964

வீரமரணம்: 19 - 12 - 1990

### கப்டன் சுந்தரி

(உ. உதயலட்சுமி - வல்வை)

### கோ-மகளே! நீ எங்கே?

வண்ண மலராய், வளரும் பயிராய்
வடிவம் தந்தவளே! நீ - எங்கே?
எண்ண மழையாய் எம் இனத்தின் குரலாய்,
தமிழ் மண்ணில் உதித்த - தங்க நிலவே நீயும் எங்கே?
அண்ணன் இருவர் காட்டிய வழியே
அரும் பணியும் தொடர்ந்த ஆராவமுதே! நீ எங்கே?
கண்ணின் மணியாய் கருத்துள் நிறைந்த
கனகமணி முத்தே நீ - மறைந்ததும் எங்கே?
அல்லும் பகலும் அசையும் பொழுதெலாம்
அடிமை விலங்கும் பொடிபட நினைந்தே
கொல்லும் பகைதனை கொடுஞ்சிறை கொள்ளவும்
கொதித்தே எழுந்த கோ - மகளே! நீ எங்கே?
சொல்லும் செயலும் நன்றாய் இணைய
சொந்தம் பந்தம் நினையா உருவாய்
வெல்லும் புலியின் கொடியும் உயர
வேதம் உரைத்திட்ட நா - மகளே!
நீயும் எழுந்தே வருவாய்!

எங்கள் அன்புப் புத்திரி வீரமரணமடைந்ததைக் கேள்வியுற்று மரணச்சடங்குகளில் பங்குபற்றிய அனைவருக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு, 17-01-1991 வியாழக்கிழமை காலை 6-00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர்கள், நண்பர்கள், இயக்கத் தோழர்கள், தோழியர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கம் - வரையறுள்ளது

## பதவி வெற்றிடங்கள்

1. பதவி - செயலாளர் - 114 | 08

சம்பளத்திட்டம் - 1005 - 40x5—50x10 - 1705

பிணைப்பணம் - ரொக்கப் பிணை ரூபா 5000/-

கல்வித் தகைமைகள்:-

(அ) கூட்டுறவுப் பணியாளர் 9 ஆவது சம்பளத் திட்டத்தில் அலுவலக உதவியாளர் / அபிவிருத்தி உறவு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் மேற்கண்ட பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

## யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கம் - வரையறுக்கப்பட்டது

# பதவி வெற்றிடங்கள்

**1. பதவி - செயலாளர் - 114 | 08**

சம்பளத்திட்டம் - 1005 - 40x5—50x10 - 1705
பிணைப்பணம் - ரொக்கப் பிணை ரூபா 5000/-

கல்வித் தகைமைகள்:-

(அ) கூட்டுறவுப் பணியாளர் 9 ஆவது சம்பளத் திட்டத்தில் அலுவலக உதவியாளர் / அபிவிருத்தி உறவு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் மேற்கண்ட பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமைகள்,

அல்லது

(இ) பட்டயம் பெற்ற செயலாளர்கள், நிர்வாகஸ்தர்கள் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில்நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் செயலாளர் பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

(ஈ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர்தரம்) இல் 03 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் ஸ்தாபனமொன்றில் செயலாளர் பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயது - எல்லை: 25 - 50 வரை
(சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது)

**2. பதவி - வர்த்தக - முகாமையாளர் - 106 | 07**

சம்பளத்திட்டம் - 1105 - 60x4 -, 75x11 - 2170
பிணைப்பணம் - ரொக்கப் பிணை ரூபா 5000/-
ஆதனப் பிணை ,, 10000/-

கல்வித் தகைமைகள்:-

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 8 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை மட்டப் பதவி அல்லது அத்தகைய மேற்பார்வை மட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளர்களின் 9 ஆவது சம்பளத் திட்டத்தில் மேற்குறித்த வண்ணம் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமைகளுடன், சந்தைப்படுத்தல்/வழங்கல் பொருள் விநியோகம் / பொருள்களின் இறக்குமதி, ஏற்றுமதி என்ற துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் மேற்பார்வை மட்டத்திலான பதவியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர்தரம்) இல் 03 பாடங்களிலான சித்தியும், சந்தைப்படுத்தல், வழங்கல், பொருள் விநியோகம் / பொருள்களின் இறக்குமதி, ஏற்றும என்ற துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் மேற்பார்வை மட்டத்திலான பதவியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயது எல்லை 25-50 வரை
(சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது)
கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட மேலதிகப் படிகளும் சேர்த்து வழங்கப்படும். விண்ணப்பப் படிவங்களை சங்க தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:- பொதுமுகாமையாளர்,
யாழ். ப. நோ. கூ. சங்கம்,
291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

விண்ணப்ப முடிவு திகதி:- 31-1-1991

பொதுமுகாமையாளர்.
14-1-1991

(B.1867)

## மாணவர் தடுமாற்றம்

ஆரியகுளத்தில் இருந்து யாழ். மாநகர சபையினால் நுளம்பின் பெருக்கத்தைக் குறைப்பதற்காக அங்கு வளரும் தாவரங்கள் அகற்றப்படுவது தெரிந்ததே. மாநகர சபையினரால் அத்தாவரம் சல்வீனியா எனப் பெயரிடப்பட்டு பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. இது தாவரவியல் கற்கும் மாணவர்களுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்திவருகின்றது. உண்மையில் அத்தாவரம் பிஸ்டியா (PISTIA) எனப்படும் ஆகாயத் தாமரையாகும். இது ஒரு பூக்கும் தாவரமாகும்.

## கடையில் 10,000 ரூபா திருட்டு

மருதனாமடம் சந்தியில் பூட்டப்பட்டிருந்த கடையொன்று உடைக்கப்பட்டு பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இணுவிலைச் சேர்ந்த இளையதம்பி மார்க்கண்டு என்பவருடைய இக் கடை, கடந்த 30 ஆம் திகதியும் உடைக்கப்பட்டு 12,000 ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டிருந்தன. இது சம்பந்தமாகப் பிரதேசப் பொறுப்பாளருக்கு முறையிடப்பட்டுள்ளது.

## மாதாந்த உதவிப் பணம்

(கொழும்புத்துறை)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தபால் அலுவலகங்களில் கடந்த வருடத்திற்கான ஆவணி, புரட்டாதி மாதங்களுக்குரிய மாதாந்த உதவிப் பணம் வழங்கப்பட்டு வருகிறது.

இப் பணத்தை இன்று வரை பெற்றுக்கொள்ளாதவர்கள் தத்தமது பகுதியில் உள்ள தபால் கந்தோரில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு இடையில் நேரில் சென்று பெற்றுக் கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

அல்லும் பகலும் அசையும் பொழுதெல்லாம்
அடிமை விலங்கும் பொடிபட நினைந்தே
கொல்லும் பகைதனை கொடுஞ்சிறை கொள்ளவும்
கொதித்தே எழுந்த கோ - மகளே! நீ எங்கே?
சொல்லும் செயலும் நன்றாய் இணைய
சொந்தம் பந்தம் நினையா உருவாய்
வெல்லும் புலியின் கொடியும் உயர
வேதம் உரைத்திட்ட நா - மகளே!
நீயும் எழுந்தே வருவாய்!

எங்கள் அன்புப் புத்திரி வீரமரணமடைந்ததைக் கேள்வியுற்று மரணச்சடங்குகளில் பங்குபற்றிய அனைவருக்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு, 17-01-1991 வியாழக்கிழமை காலை 6-00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர்கள், நண்பர்கள், இயக்கத் தோழர்கள், தோழியர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

வல்வெட்டித்துறை. பெற்றோர், சகோதரசகோதரிகள், மைத்துனர்கள், மருமக்கள்.
(B-1864)

# நினைவு கூருகின்றோம்!

## தை 17

1986 ஆம் ஆண்டு ஆரையம்பதியில் வீரமரணமடைந்த
**முரளி, இந்திரன்** (கிரான்குளம், மட்டக்களப்பு)
இதே ஆண்டு நாயாற்றுவெளியில் ஸ்ரீலங்கா இராணுவத்துடனான நேரடிமோதலில் வீரமரணமடைந்த
**றோஸ்மன்** (இ. பீரிஸ் - முருங்கன்)
1987ஆம் ஆண்டு ஆனையிறவில் ஸ்ரீலங்கா இராணுவத்துடனான நேரடிமோதலில் வீரமரணமடைந்த
**லெப். ஜொனி** (அ. சீமோன் - இளவாலை)
**லெப். சதா** (பு. எல்லிஸ் திமதி - இயக்கச்சி)
**லெப். குகன்** (சண்முகம் - மந்துவில்)
**அஜித்** (ராஜன் - கொழும்பு)
**சுமன்** (இ. ஜெயானந்தராசா - குடத்தனை)
**அர்ச்சுனா** (ஜெயபாலன் - கல்வயல்)
1988 ஆம் ஆண்டு தெல்லிப்பளையில் வீரமரணமடைந்த
**அசீஸ்** (நா. லேந்திரன் - தெல்லிப்பளை)
1989ஆம் ஆண்டு வவுனியா மாமடுவவில் வீரமரணமடைந்த
**ரகு** (பூ. தாஸ்நிதி - கரவெட்டி)
இதே ஆண்டு நெடுந்தீவில் இடம்பெற்ற முற்றுகையின்போது சயனைட் அருந்தி வீரமரணமடைந்த
**லெப். ரவி** (இ. ரவிச்சந்திரன் - பருத்தித்துறை)
இதே ஆண்டு வீரமரணமடைந்த
**சோமன்** (சோமசுந்தரம் - கனுவாஞ்சிக்குடி)
**றிச்சார்ட், நிஸாம்** (கு. ராஜேந்திரன் - களுதாவளை)
ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்
— விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி
(B-1862)

## சிந்தனைக்கு

நண்பனிடம் கோபம் கொண்டேன்;
மனம் விட்டுச் சொன்னேன், மறைந்தது கோபம்;
பகைவனிடம் கோபம் கொண்டேன்,
வாய் விட்டுச் சொல்லவில்லை, வளர்ந்தது கோபம்.

— வில்லியம் பிளேக்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 17-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# சமாதானப் போர்வைக்குள் மேற்குலகின் யுத்தம்

இந்தப்பத்திரிகையை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் போது வளைகுடாப் பகுதியில் ஒரு பெரும் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கலாம்; அல்லது போரின் விளிம்பில் நிலைவரம் இருக்கலாம்.

வளைகுடாவில் போர் தவிர்க்க முடியாத ஓர் அளவிற்கு நிலைமைகள் இறுக்கமடைந்து விட்டன.

இராஜதந்திர முயற்சிகளும் பெருமபாலும் முடிவடைந்து விட்டன என்றே கொள்ளலாம். இந்த இராஜதந்திர முயற்சிகளில் இறுதி நேர பிரான்சின் முயற்சி, அமெரிக்காவினதும் பிரிட்டனினதும் எதிர்ப்பின் காரணமாகக் கைவிடப்பட்டுள்ளது

இன்றைய வளைகுடா நிலைவரத்திற்கு ஈராக் மட்டுமே காரணம் என்று சொல்வதற்கில்லை ஈராக் போன்று அமெரிக்காவிற்கும் அதனுடன்சேர்ந்த மேற்குலகத்திற்கும் யுத்தத்திற்கான பங்குண்டு இந்த நாடுகளின் உலக மேலாண்மை வாதமே இன்று வளைகுடாவில் இந்தச் சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது. அதேவேளை இரு பகுதியினரும் விட்டுக் கொடுக்காத நிலைமையே போர் நிலைக்குத் தள்ளியுள்ளது.

ஆனால், இந்தப் போரினால், உலகில் பெரும் பொருளாதார நெருக்கடி தொடக்கம் சூழல் மாசடைதல் வரையிலான பல தாக்கங்கள் ஏற்படும் அதேவேளை இந்தப் போரில் ஈடுபடவுள்ள இரு அணியினரும் நன்மை அடையப் போவதில்லை என்பதுதான் உண்மை.

இந்தப் போர் முடிவில் ஈராக் பெருமளவில் பலவீனப்படும் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. ஆனால், இன்று ஈராக் போருக்காக வகுத்துள்ள திட்டமானது பாரசீகவளைகுடாப் பகுதியில் மட்டுமல்ல இஸ்லாமிய அரபு உலகெங்கிலும் அமெரிக்காவின் நலனுக்குநெருக்கடியைத்

# பிரேமாவின் சமாதான நிபந்தனைகளின் உள்ளடக்கம்

சாரணன்

'போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்' இப்படிக்கூறி 1977ஆம் ஆண்டு நிராயுதபாணிகளான தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தப்பிரகடனம் செய்தார் ஜே. ஆர்.

'நான் சமாதானத்திற்குத் தயாராக உள்ளேன்: பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புகிறேன்' என்று அடிக்கடி கூறி வருபவர் இன்றைய ஜனாதிபதி பிரேமதாசா,

ஆனால் விடுதலைப்புலிகள் சமாதானத்தை விரும்பி ஒருதலைப்பட்சமாக ஒரு யுத்த நிறுத்தத்தைச் செய்து பேச்சு வார்த்தைக்கான ஒரு சந்தர்ப்பத்தை சிங்கள அரசுக்கு அளித்தபோது, பிரேமதாசா அரசாங்கம் அதனை ஏற்க மறுக்கின்றது.

சமாதானத்திற்கான புலிகளின் அறிவிப்பைக் கேட்டு தடுமாறிய சிங்கள அரசு இருதலைக்கொள்ளி நிலையில் ஒருவாரகால யுத்தநிறுத்தத்தை கண்துடைப்புக்கு அறிவித்தது பின்பு சில சாக்குப் போக்குச் சொல்லி கடும் நிபந்

தமிழ் மக்களின் உரிமைகளை தொடர்ந்து மீறி வந்த சிங்கள அரசு 1950 களின் மத்தியிலிருந்து நிராயுத பாணிகளான தமிழ் மக்களுக்கு எதிராக பலாத்காரத்தை கட்டவிழ்த்து விட்டு ஆயுதம் தாங்கிய ஒடுக்கு முறையைச் செய்யத் தொடங்கியது.

சிங்கள அரசின் உரிமை மீறல்களும், பலாத்காரங்களும் ஆயுதம் தாங்கிய ஒடுக்குமுறைகளுமே தமிழ் இளைஞர்களை ஆயுதம் தாங்க வைத்தது. தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தாங்க வேண்டிய காரணமே சிங்கள ஒடுக்கு முறைதான்.

பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்ண அண்மையில் வெளியிட்ட கருத்தொன்றே உண்மையை உணர்த்த போதுமானதாகும். அதாவது 1956 இல் கொண்டு வரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் தான் தமிழ் இளைஞர்களை இன்றைய நிலைக்குத் தள்ளியது; சிங்களத் தலைவர்களின் மதிநுட்பமற்ற நடவடிக்கைகள்தான் தமிழ் இளைஞர்களை ஆயுதம் தாங்க வைத்தது என்னும் பொருள் படக் கூறியுள்ளார்.

உண்மை இப்படியிருக்கும் போது, எவ்வாறு ஆயுதங்களைக் கீழே போடுமாறு சிங்கள அரசு நிபந்தனைவிதிக்க முடியும்? எனவே ஒடுக்கு முறைகளை கைவிட வேண்டியதும், ஆயுதங்களைக் கீழே போட வேண்டியதும், வடக்கு, கிழக்கிலுள்ள தமது இராணுவ முகாம்களை மூட வேண்டி

நோக்குவோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சிங்கள புத்திஜீவிகளும், பத்திரிகையாளர்களும் வருவதில்லை. அரசு கூறும் பொய்ப் பிரசாரங்களை அப்படியே நம்புகின்றனர்: இதனால் பத்திரிகையாளர்களும், புத்திஜீவிகளும் பிரச்சினைகளைப்பற்றி தப்புக் கணக்குப் போட்டு யுத்தத்தைத் தூண்டும் எழுத்துக்களை எழுதுகின்றனர். சிங்கள பத்திரிகையாளர்களின் இழிதொழிலுக்கு ஏனைய சிங்கள இனவாத சக்திகளும் இலகுவில் எடுபட்டு விடுகின்றன. எனவே இப்பிரச்சினையின் முதல் காரணகர்த்தாக்கள் பொய்ப் பிரசாரங்களையே செய்து வந்த பிரேமதாசா அரசாங்கமும், பத்திரிகைகளும், புத்திஜீவிகளும் தான் பிழையான நம்பிக்கைகளை பத்திரிகையாளரிடம் ஏற்படுத்திய பிரேமாவை பின்பு அதே பத்திரிகையாளரிடமிருந்து விடுபட முடியாது பத்திரிகைகளின் இனவாதப் பக்கமே அவர் எடுபட வேண்டியுள்ளது. பத்திரிகைகளின் கருத்திற்கு பிக்குகளும், மேற்கூறிய ஏனைய சக்திகளும் எடுபடுவர். இவ்வாறு சங்கி

தனைகளை விதித்து யுத்தப் பிரகடனம் செய்துள்ளது.

அப்படியென்றால் 'சமாதானம்' என்ற சொல்லிற்கு சிங்கள அரசின் அகராதியில் இருக்கும் அர்த்தம் தான் என்ன?

இங்கு சிங்கள அரசென்பது ஒரு பிரேமதாசா அல்ல. அப்படியாயின் சிங்கள அரசின் தீர்மானங்களை நிர்ணயிக்கும் முக்கிய சக்திகள் எவை?

(1) ஆளும்கட்சி
(2) பௌத்த நிறுவனம்
(3) இராணுவம்
(4) பத்திரிகைகள்
(5) புத்திஜீவிகள்
(6) எதிர்க்கட்சிகள்

லித் தொடராக பிரேமாவிலிருந்து பத்திரிகைகளுக்கும், பத்திரிகைகளிலிருந்து பொது மக்களுக்கும், பின்பு பத்திரிகைகளிலிருந்து பிரேமாவுக்கும் என ஒன்றிலொன்று தொடர்புற்று, தொடர்சங்கிலியாய் சிங்கள இனவாதம் பூரணவடிவத்தைப் பெறுகின்றது. அந்தப் பூரண வடிவத்தின் வெளிப்பாடே இன்று தமிழ் மக்களுக்கெதிரான யுத்தப்பிரகடனம்.

எனவே பிரேமதாசா அரசாங்கமானது சமாதானத்தினதும், புத்த பிரானது அஹிம்சையினதும், பிரதிநிதி அல்ல, மாறாக இரத்தம்

யுத்தத்திற்கான பங்குண்டு இந்த நாடுகளின் உலக மேலாண்மை வாதமே இன்று வளைகுடாவில் இந்தச் சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது. அதேவேளை இரு பகுதியினரும் விட்டுக் கொடுக்காத நிலைமையே போர் நிலைக்குத் தள்ளியுள்ளது.

ஆனால், இந்தப் போரினால், உலகில் பெரும் பொருளாதார நெருக்கடி தொடக்கம் சூழல் மாசடைதல் வரையிலான பல தாக்கங்கள் ஏற்படும் அதேவேளை இந்தப் போரில் ஈடுபடவுள்ள இரு அணியினரும் நன்மை அடையப் போவதில்லை என்பதுதான் உண்மை.

இந்தப் போர் முடிவில் ஈராக் பெருமளவில் பலவீனப்படும் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. ஆனால், இன்று ஈராக் போருக்காக வகுத்துள்ள திட்டமானது பாரசீகவளைகுடாப் பகுதியில் மட்டுமல்ல இஸ்லாமிய அரபு உலகெங்கிலும் அமெரிக்காவின் நலனுக்குநெருக்கடியைத் தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை.

ஈராக் எந்த முனையில் இருந்து, எவ்வாறு தாக்கப்பட்டாலும் பதிலடி இஸ்ரேலுக்குத்தான் என ஈராக் அறிவித்துள்ளது. ஈராக்கின் விமானப் படையை யுத்தம் தொடங்கி ஒரு சில தினங்களில் முழுமையாகச் செயலிழக்கச் செய்யலாம் என அமெரிக்கா கருதுவதினால் இஸ்ரேலை போரில் இருந்து ஒதுக்கிவிடலாம் என அமெரிக்கா எண்ணுகின்றது. ஆனால், அதையும் மீறி ஈராக் தாக்கினால் இஸ்ரேல் பதில் தாக்குதல் மேற்கொள்வதுடன் வளைகுடாப் போர்நிலைவரம் மட்டுமல்ல, மத்திய கிழக்கிலும் ஒரு போர் மேகம் சூழும். ஈராக்கிற்கெதிராக பன்னாட்டுப் படையில் உள்ள அரபு/இஸ்லாமிய நாடுகளேதமது நிலையை பரிசீலனை செய்ய வேண்டி வரும்.

இதே வேளை, இப்போரில் ஈராக்கிலோ, குவைத்திலோ, பெருமளவு அரபுச் சகோதரர்கள் மடிவதையும் அரபு உலகம் ஜீரணித்துக் கொள்ளாது.

இந்நிலையில், ஈராக் மீது அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட போர் இஸ்ரேலைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட போராகவே கொள்ளப்படும். இது வளைகுடாவிலும், மத்திய கிழக்கிலும் திட்டவட்டமாக அமெரிக்க நலனைப் பாதிப்படையச் செய்யப் போவது நிச்சயம்.

இந்தப்போர் ஈராக் இராணுவத்திற்கும் சர்வதேசிய படைக்கும் இடையில் நடைபெறும்போராக அமெரிக்காவும் மேற்கணியினரும் காட்ட முற்பட்டாலும், இது மேற்குலகிற்கும் ஈராக்கிற்கும் இடையிலான போரேயாகும். இந்தப் பிரச்சினையில் உலகப்பூராவும் போரை விரும்பவில்லை என மேற்குலகம் பறைசாற்றிக் கொண்டு போரை நடத்துவதற்கு துடித்துக் கொண்டிருக்கின்றது.

ஆனால், போரை விரும்பவில்லை எனக் கூறும் உலக நாடுகள், குறிப்பாக மூன்றாம் உலக நாடுகள் மேற்கணியினரும், ஈராக் மீது போரைத் தொடுப்பதை விரும்பவில்லை என்பதை மேற்கு நாடுகள் மறைத்து வருகின்றன | அதாவது போர் ஈராக்கினாலேயே தொடுக்கப்படுகின்றது என்றதொரு நிலையைத் தோற்றுவித்துள்ளனர். எடுத்துக்காட்டாக போர் வேண்டாம் என அறைகூவல் விடுக்கும் அன்னை திரேசா அவர்கள் கூட போர் வேண்டாம் என ஈராக்கிடம் கோருகின்றாரே ஒழிய அமெரிக்காவிடம் கோரவில்லை. ஏன் அமெரிக்காவிடம் அவர் கோரிக்கை ஒன்றை விடுக்கவில்லை? அமெரிக்கா தானே போர் முயற்சியில் தீவிரமாகவுள்ளது

இந்நிலை மூன்றாம் உலகநாடுகளுக்கு நல்லதொரு படிப்பினையாகும். ஐ நா. சபையில் எண்ணிக்கையில் பெருமளவில் இருந்தும், போரைத்தடுத்து நிறுத்த இந்த நாடுகள் விரும்பியும், அதற்காக அவர்களால் எதுவும் செய்ய முடியாது உள்ளது. பலம் பொருந்திய மேற்குலகம் தனது விருப்பத்தினை ஐ நா.வின் பெயரில் செய்து முடிக்கப் பார்க்கின்றது.

இவ்வாறான ஏமாற்றுக்கள், ஏற்றத்தாழ்வுகள் நாடுகளுக்கிடையில் மாறாவிட்டாலும் ஐ நா வில் கட்டாயம் மாற்றப்பட வேண்டும் இதற்கு ஒரே வழி, ஐ.நா.வில் சில நாடுகளுக்குரிய சிறப்பு அதிகாரங்கள் - 'வீட்டோ' - ரத்துச் செய்யப்பட வேண்டும். இதற்கு மூன்றாம் உலகம் ஒன்று திரண்டு குரல் கொடுக்க வேண்டும்.

---

னம்' என்ற சொல்லிற்கு சிங்கள அரசின் அகராதியில் இருக்கும் அர்த்தம்தான் என்ன?

இங்கு சிங்கள அரசென்பது ஒரு பிரேமதாசா அல்ல. அப்படியாயின் சிங்கள அரசின் தீர்மானங்களை நிர்ணயிக்கும் முக்கிய சக்திகள் எவை?

(1) ஆளும்கட்சி
(2) பௌத்த நிறுவனம்
(3) இராணுவம்
(4) பத்திரிகைகள்
(5) புத்திஜீவிகள்
(6) எதிர்க்கட்சிகள்
(7) வெளிநாட்டுச்சக்திகள்

யுத்தநிறுத்தம் பற்றிய புலிகளின் அறிவிப்பு வெளியானதும் மேற்கூறிய சகல சக்திகளும் துரிதமாகச் செயற்படத் தொடங்கின. தென்னிலங்கைப் பத்திரிகையாளரும் புத்திஜீவிகளும் யுத்த நிறுத்தத்தை முதலில் எதிர்க்கத் தொடங்கினர்; இதைத் தொடர்ந்து மதநிறுவனமும் இராணுவமும் எதிர்க்கட்சிகளும் ஆளும்கட்சியும் யுத்த நிறுத்த எதிர்ப்பை நோக்கி முன்னேறின.

மதத் தலைவர்களுடனும், இராணுவத்தினருடனும், எதிர்க்கட்சியினருடனும் ஆலோசனை நடாத்திவிட்டு பிரேமா எடுத்த முடிவு யுத்தப் பிரகடனம்.

எனவே இப்பொழுது சிங்கள அரசுக்குத் தேவைப் படுவது இதுதான்:- இந்த யுத்தப் பிரகடனத்தை சிங்கள அரசின் தலையிற் போடாது தமிழரின் தலையில் எவ்வாறு சுமத்துவதென்பதே.

"விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவுத் தலைவர் திரு. வே. பிரபாகரன் பேச்சு வார்த்தைகளில் நேரடியாகக் கலந்து கொள்ள வேண்டும்.

"சகல கட்சிகளின் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெற வேண்டும்.

"அங்கீகரிக்கப்படாத இயக்கங்கள் (அதாவது விடுதலைப் புலிகள் இயக்கம்) ஆயுதங்களைக் கீழே போடுவதாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்"

இது போன்ற மேலும் பல நிபந்தனைகளுடன் கூடிய அறிவிப்பை சிங்கள அரசு செய்து விட்டு யுத்தப் பிரகடனம் செய்துள்ளது.

இங்கு சிங்கள அரசு விதித்துள்ள சகல நிபந்தனைகளுக்கும் தனித்தனியே பதிலளிக்க வேண்டிய அவசியம் இல்லை. "ஆயுதங்களைக் கீழே போடுதல்" என்ற ஒரு விடயத்திற்கு மட்டும் பதிலளித்தால் போதும்.

மதிநுட்பமற்ற நடவடிக்கைகள்தான் தமிழ் இளைஞர்களை ஆயுதம் தாங்க வைத்தது என்னும் பொருள் படக் கூறியுள்ளார்.

உண்மை இப்படியிருக்கும் போது, எவ்வாறு ஆயுதங்களைக் கீழே போடுமாறு சிங்கள அரசு நிபந்தனைவிதிக்க முடியும்? எனவே ஒடுக்கு முறைகளை கைவிட வேண்டியதும், ஆயுதங்களைக் கீழே போட வேண்டியதும், வடக்கு, கிழக்கிலுள்ள தமது இராணுவ முகாம்களை மூட வேண்டியதும் சிங்கள அரசுதான்.

இந்த நிபந்தனையிலிருந்து வானேந்திய சிங்கத்தின் உண்மையான நோக்கம் சமாதானமல்ல; தமிழரை அழிப்பதுதான் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

யுத்தப் பிரகடனம் பற்றிய யதார்த்தத்தை மேலும் மக்களுக்கும், பின்பு பத்திரிகைகளிலிருந்து பிரேமாவுக்கும் என ஒன்றிலொன்று தொடர்புற்று, தொடர்ச்சியாய் சிங்கள இனவாதம் பூரணவடிவத்தைப் பெறுகின்றது. அந்தப் பூரண வடிவத்தின் வெளிப்பாடே இன்று தமிழ் மக்களுக்கெதிரான யுத்தப்பிரகடனம்.

எனவே பிரேமதாசா அரசாங்கமானது சமாதானத்தினதும், புத்த பிரானது அஹிம்சையினதும், பிரதிநிதி அல்ல, மாறாக இரத்தம் சொட்டும் வாள் ஏந்திய சிங்கத்தின் பிரதிநிதி. இப்போதைய யுத்தப் பிரகடனத்திலும் காணப்படுகின்ற ஒரு பக்கம் சமாதானம் பற்றிய தோற்றமும் புத்தரைக் காட்டிக் கொண்டு, வாள் ஏந்திய சிங்கத்தைப் பின்பற்றும் போக்கே.

# வெளியேறிய வலி.வடக்குமக்கள் நிவாரண உதவியின்றி அவதி

(செ. த. மை.)

பலாலி முகாமுக்கு அண்மையில் சிறிலங்கா அரச படைகளின் தொடர்ச்சியான தாக்குதல் நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து, வெளியூர்களில் வாழும் குடும்பங்கள் நிவாரண உதவிகளோ, வேறு தொழில் வாய்ப்பு வசதிகளோ இல்லாமல் வாழ்க்கைச் செலவுக்கு கஷ்டப்படுகிறார்கள்.

மயிலிட்டி, வறுத்தலைவிளான், வீமன்காமம், கட்டுவன், குரும்பசிட்டி, ஏழாலை வடக்கு போன்ற பகுதிகளில் வறுமைகோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களே அதிகம் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இப்பகுதிகளில் அதிகமாகக் கடற்றொழில், விவசாயம், கூலி வேலைகளிலும் ஈடுபடுபவர்கள் மத்தியிலேயே கஷ்ட நிலை தோன்றியுள்ளது

அக்குடும்பங்கள் உடுவில், மல்லாகம், இணுவில், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் முகாம்களிலும், தனியார் வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளார்கள்.

அரசாங்கம் நிவாரணமாக வழங்கிவரும் கொஞ்சநஞ்சமான உலர் உணவுப்பொருள்களும் காலந்தாழ்த்தியே வழங்கி வருவதால் தங்கள் அன்றாட சீவியத்தைகொண்டு செலுத்த முடியாமல் தத்தளிக்கின்றார்கள்.

தொழில் வாய்ப்போ, பண வசதியோ இன்மையால் இன்று அதிக விலையில் விற்பனை செய்யப்படும் உணவுப்பொருள்களை பெறமுடியாத நிலை ஒரு புறமும், உணவுப்பகிர்வு அட்டைக்கோ, நிவாரணப் பத்திரத்துக்கோ ப. நோ. கூ. சங்கங்கள் வாராவாரம் உணவுப் பொருள்கள் வழங்காமல் விடும் நிலை ஒரு புறமாக இருக்கும் இன்றைய சூழ்நிலையில் இக் குடும்பங்கள் ஒருநேரக் கஞ்சிக்குக் கூட வசதியற்று பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

கடந்த 9ஆம், 10ஆம் திகதிகளில் நிவாரணப் பத்திரங்களுக்கு உணவுப் பொருள்கள் இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் என்று பத்திரிகைகளில் யாழ். செயலக அதிகாரிகள் அறிவித்திருந்ததைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட ப.நோ.கூ.ச. கிளைகளுக்குப் படையெடுத்துச் சென்றார்கள். அங்கெல்லாம் உணவுப் பொருள்கள் வந்து சேராததால், வழங்க முடியாமலிருப்பதாக சங்கங்களின் கிளை மனேஜர்கள் கைவிரித்துவிட்டார்களாம்;

### யாழ். மாவட்ட மாணவர் ஒன்றியம்

# மாணவர், ஆசிரியர் பிரச்சினைபற்றி சிறிலங்கா ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மாணவர் ஒன்றியம் தமிழீழப் பிரதேசத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் அரச படைகளினாலும், யுத்த நடவடிக்கைகளினாலும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவற்றை நிறுத்தும்படி கோரியும் சிறிலங்கா ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

மேற்படி மகஜரில் தமிழ் ஆசிரியர்களையும், மாணவர்களையும் அரச படைகள் கொலை மற்றும் கைதுசெய்தலை நிறுத்தவேண்டுமென்றும், பாடசாலைகள், கல்வி நிலையங்கள் மீதான குண்டுவீச்சை நிறுத்த வேண்டுமென்றும், இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்ட பாடசாலைகளில் இருந்து படையினரை வெளியேற்ற வேண்டுமென்றும், தென் தமிழீழ மாணவர்கள் தமது கல்வியைத்தொடர்வதற்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்றும், நாட்டின் ஏனைய பகுதி மாணவர்களைப்போல் எமக்கும் பாடப் புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள் போன்றவற்றை விநியோகிக்க வேண்டும் என்றும, மாணவர்கள், ஆசிரியர்களின் போக்குவரத்து வசதிக்காக எரிபொருள் தடையை நீக்க வேண்டுமென்றும், யுத்தம் என்ற போர்வையில் தமிழ் மக்களுக்கெதிரான திட்டமிட்ட இனப்படுகொலையை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற மேற்படி ஏழு கோரிக்கைகள் அடங்கியிருந்தன.

இந்த மகஜர் யாழ். கல்வித் திணைக்களம், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் போன்றவர்களுக்கு ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. க.

---

தமிழ்மாணவர்களின்

ளிக்கப்பட்ட மகஜரைப் பெற்றுக் கொண்டு பதிலளிக்கும் போது யாழ். கல்விப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தமிழ் மாணவர்களின் கல்விக்காக நான் எதையும் செய்யத் தயாராகவுள்ளேன் உங்களால் வழங்கப்பட்ட மகஜரை உரிய இடத்திற்கு அனுப்பிவைப்பேன்,,என்றார். (மு)

---

ஐந்தாம

எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

கல்வித் திணைக்களத்தால் நடாத்தப்படவிருக்கும் இந்த பரீட்சையின் அடிப்படையில் ஐம்பது வீதமான வெற்றிடங்களை நிரப்பவும், மிகுதி ஐம்பது வீதமான வெற்றிடங்கள் பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படும் பரீட்சையின் மூலமும் நிரப்பப்படவுள்ளது

தேசியப் பாடசாலைகளுக்கு ஒரு தினமும் ஏனைய பாடசாலைகளுக்கு வேறொரு தினமும் இப்பரீட்சை நடாத்தப்படும். இப்பரீட்சையினை நடாத்துவதன்மூலம் மாணவர்களைப் பாடசாலைகளில்சேர்ப்பதில் உள்ள சிக்கல் ஓரளவு தீரும் எனவும் யாழ் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

---

பொதுசன

கொண்டு தகவல்களைத் தெரிந்துசொல்வதற்கு மற்ற எழுத்து வினைஞர் முன் 'தவம்' இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதனால் தமது வேலையும்குழம்புகிறது என்று சில எழுதுவினைஞர்கள் முகத்தைச் சுழித்துக் கொள்கிறார்களாம்.

---

சர்வோதயத்திற்கு

செய்யப்பட்டு வருகின்றனர் என்றும் திருமலையில் மட்கோ, பாலையூற்றுப் பகுதியில் அமைக்கப்பட்ட 47 வீடுகளில் ஒன்று மட்டும் தமிழ்ப் நோயாளி ஒருவருக்கு வழங்கப்பட்டது என்றும் இந் நிறுவனத்திற்கு நிதி உதவி வழங்கும் கனடிய, நெதர்லாந்து நாடுகளின் நிதி நிறுவன பிரதிநிதிகளான பிரைன்றோ, எஸ். ஏ கரீம் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

எனவே வடகிழக்குப் பகுதி பொறுப்பாளராக தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டு தனது இனவாதப் போக்கை இந் நிறுவனம் கைவிடும் வரை தம் நிதி உதவி எதையும் வழங்கப்போவதில்லை எனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர். (க)

---

வெளி யறிய

ஙதத் தழுவிக்கொண்டனர்.

நேற்று முன்தினம் மேற்படி முகாமில் இருந்து படையினர் முன்னேறிய போது சிலாவத்தை என்னும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் சிறிலங்காப் படையினர் மீது கடும் எதிர்த்தாக்குதலைத் தொடுத்த போது இரு தரப்பினருக்கும் இடையில் கடும் சமர் மூண்டது இம்மோதலில் படையினர் தரப்பில் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டதைத்

---

## இயக்கச்சியில் குண்டுவீச்சு; சிறுமிபடுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இயக்கச்சிப் பகுதியில் சங்கத்தார் வயலில் பொது மக்கள் குடியிருப்புக்களை நோக்கி சிறிலங்கா விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடாத்தியதில் சிறுமி ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை பத்து மணியளவில் இப்பகுதியில் பல முறை வட்டமிட்ட இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் பல தடவை குண்டுத்தாக்குதலை நடாத்தியது.

இத்தாக்குதலில் மதி (வயது 14) என்ற சிறுமி படுகாயமடைந்துள்ளார்.

இப்பகுதி மக்கள் பதுங்குகுழிகளில் தஞ்சமடைந்திருந்தமையால் உயிர் இழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. (க)

## இஸ்ரேல் தாக்கப்பட்டால் சரியான பதிலடிகிடைக்கும்

(டெல் அவிப்) —எட்சாட் சமீர்

ஈராக்கினால் இஸ்ரேல் தாக்கப்பட்டால் சரியான பதிலடி கொடுக்கப் படும் என இஸ்ரேல் பிரதம மந்திரிசமீர் தெரிவித்தார்.

அதேவேளை இஸ்ரேலைத் தாக்கும் எந்தவொரு விமானத்தையும் வீழ்த்துவோம் என்றும் அவை சிரியா, ஜோடான் எல்லைகளுக்குள் சென்றாலும் துரத்தி சென்று வேட்டையாடுவோம் என இஸ்ரேல் விமானப்படைத் தளபதி தெரிவித்தார்.

## "எண்ணெய்க்காகப் போர் வேண்டாம்" பிரிட்டனில் ஆர்ப்பாட்டம்

''எண்ணெய்காக போர்வேண்டாம் என கோசித்த வண்ணம் பல்லாயிரக் கணக்கான மக்கள் நேற்று லண்டனில் ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள்.

அதே வேளை அமெரிக்காவில் சென் பிரான்சிஸ் கோவிலும் பெரும் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. அத்தோடு அமெரிக்காவின் பல நகரங்களிலும் தொடர்ச்சியாக 24 மணி நேரமும் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் பரிஸ், பேர்லின், ஆகிய நகரங்களிலும் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாடங்கள் இடம் பெற்றன.

## சதாம் ஹூசைன் பொறுப்பேற்றார்

(பாக்தாத்)

போர் நெருங்கி வருவதை தொடர்ந்து ஈராக் அதிபர் சதாம் ஹூசைன் ஈராக்கிய படைகளின் நேரடிப் பொறுப்பை நேற்று ஏற்றுக் கொண்டார்.

---

தாழங்குடா

## மூன்று இராணுவம் பலி

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் மூன்று இராணுவத்தினர் இறந்ததாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

## நூற்றாண்டு விழாநிகழ்ச்சிகள்


## மரண அறிவித்தல்கள்

திரு. துரையப்பா இரத்தினகோபால்

றுக் கொண்டு பதிலளிக்கும் போது யாழ். கல்விப் பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தமிழ் மாணவர்களின் கல்விக்காக நான் எதையும் செய்யத் தயாராகவுள்ளேன் உங்களால் வழங்கப்பட்ட மகஜரை உரிய இடத்திற்கு அனுப்பிவைப்பேன்,,என்றார். (மு)

பொதுசன

கொண்டு தகவல்களைத் தெரிந்துசொல்வதற்கு மற்ற எழுதுவினைஞர் முன் 'தவம்' இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதனால் தமது வேலையும்குழம்புகிறது என்று சில எழுதுவினைஞர்கள் முகத்தைச் சுழித்துக் கொள்கிறார்களாம்.

## மரண அறிவித்தல்கள்

### திரு.துரையப்பா இரத்தினகோபால்

(யாழ். கில்னர் லேன் மாரியம்மன் கோயில் காவலரும், ஒய்வுபெற்ற இலங்கைப் போக்குவரத்துச்சபை காப்பாளரும், நடத்துநரும்)

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த துரையப்பா இரத்தினகோபால் (கோயிலண்ணை) 16 - 01 - 91இல் சிவபதமடைந்தார். அன்னார் வேலம்மாவின் அன்புக் கணவரும், செல்வி சிவபுரத்தரசி (ஆசிரியை யா/கொட்டடி நமசிவாய வித்தியாசாலை)யின் அருமைத் தந்தையாரும், திருமதி இராமாமிர்தம் சண்முகசுந்தரம் (ஒய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (17-01-91) பிற்பகல் 1 மணியளவில்நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

185/9 கப்டன் பாரதி வீதி,
(கில்னர் ஒழுங்கை)
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
தி குஞ்சிதபாதம்
(பெறாமகன்)
(B/1870)

### திரு. கோ. செபரெத்தினம்

திரு. கோ. செபரெத்தினம் 16-01-91 அன்று காலமாகிவிட்டார். இவர் திருமதி மொனிக்கா மாகிரேற்றின் அன்புக்கணவரும், ஜெனோவா, வனிதா, மல்லிகா, லவன் (சுவிஸ்), ஜெனதாஸ் (இத்தாலி), டலஸ், மொறிஸ், கெற்றி, ஜினேஸ் (இத்தாலி), சுஜாதா ஆகியோரின் அன்புத்தந்தையும், பிறேடா, ஞானராசா, பாபு (டோகா), ஆனந்தி, சிறி ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (17 - 01 - 91) பிற்பகல் 4 மணியளவில் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/2 மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(R/1039)

தகவல்:
இ. பிறேடா

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு தைமாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வும் இவர்கள் தெரிவித்துள்ளனர். (க)

வெளி யறிய

ஊதத் தழுவிக்கொண்டனர்.

நேற்று முன்தினம் மேற்படி முகாமில் இருந்து படையினர் முன்னேறிய போது சிலாவத்தை என்னும் இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் சிறிலங்காப் படையினர் மீது கடும் எதிர்த்தாக்குதலைத் தொடுத்த போது இரு தரப்பினருக்கும் இடையில் கடும் சமர் மூண்டது இம்மோதலில் படையினர் தரப்பில் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

மாணவரின்

டும்'' ''வாய்க்காது இங்கு உனது எண்ணம்'' வாயைச் சுருட்டு சிங்கள அரசே'' ''நிலையான தமிழீழம் உருவாகும் வரைக்கும் தமிழீழ மாணவர் களம் நோக்கிப் பாய்வர்'' ''குறோட்டனும் கிறீப்பரும் உண்பதற்குதவா கீரையும் வெண்டையும் உண்பதற்குதவும்'' போன்ற கோஷங்களை நேற்று தமிழீழ மாணவர்கள் சுன்னாகம் சந்தியிலிருந்து ஆரம்பித்த மாபெரும் ஆர்ப்பாட்ட துவிச்சக்கரவண்டி ஊர்வலத்தில் எழுப்பினர்.

இந்த ஊர்வலத்திற்கு பல்வேறு இடங்களையும் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றினர்.

கச்சேரி சுற்றி வளைப்பில்

நேற்று மதியம் யாழ் செயலகம் முன்பு வந்து சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமது துவிச்சக்கரவண்டிகள் சகிதம் செயலகத்தைச் சுற்றி வளைத்தனர். இதனைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் மத்தியில் சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கும் மகஜர் மாணவர் ஒருவரால் வாசிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சண்முகநாதனிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்த மகஜர்களின் பிரதிகள் யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர், ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர்வாழ்வு நிதியம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். காரியாலயம் ஆகியவற்றிற்கும் கையளிக்கப்பட்டது என செயலகத்தில் நடைபெற்ற அந்த கூட்டத்தில் மாணவர்களால் தெரிவிக்கப்பட்டது. (லோ)

வில் சென் பிரான்சிஸ் கோவிலும் பெரும் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. அத்தோடு அமெரிக்காவின் பல நகரங்க

## சதாம் ஹூசைன் பொறுப்பேற்றார்

(பாக்தாத்)

போர் நெருங்கி வருவதை தொடர்ந்து ஈராக் அதிபர் சதாம் ஹூசைன் ஈராக்கிய படைகளின் நேரடிப் பொறுப்பை நேற்று ஏற்றுக் கொண்டார்.

தாழங்குடா

முக்கு அழைத்துச் சென்றனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரு வயோதிபர் மட்டும் கடுமையாக தாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்ட நிலையில் விடுதலை செய்யப்பட்டார். ஏனையவர்களின் நிலைபற்றி இதுவரை எதுவும் தெரியவில்லை. (க)

விமானத்

அரை மணி நேரமாக வட்டமிட்டு வேட்டுக்களைத் தீர்த்தது

தொடர்ந்து காலை பத்து மணியளவில் சிறிலங்கா விமானப்படையின் இரு குண்டு வீச்சு விமானங்கள் இப்பகுதியில் குண்டுத் தாக்குதலை நடத்தின இத் தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரம் எதுவும் தெரியவில்லை. (க)

ஐ நா. காலக்கெடு

தனது நாட்டின் எல்லைகளுக்குள் எதிரி படைகளை தான் நுழைய விடப்போவது இல்லை என்று சதாம் ஹூசைன் கூறியிருந்தார்.

காலக்கெடு முடிந்தவேளையில் பக்தாத் நகரம் பரபரப்பு எதுவும் இன்றி அமைதியாக இருந்ததாம் அங்கு மௌனம் நிலவியதோடு. பனி மூட்டம் நகரை மூடியிருந்தது என்றும் அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க சார்பான பல்லின படைகளும், ஈராக்கியப் படைகளும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்களை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும்வேளையில் அமெரிக்கப்போர்த்தந்திரோபாயங்கள் பற்றி இராணுவ நிபுணர்கள் கருத்துவெளியிட்டுள்ளார்கள்.

முதலில் அமெரிக்க யுத்தக் கப்பல்களிலிருந்து அதிவேக ஏவுகணை தாக்குதலைஈராக்கிய கேந்திர நிலையங்கள்மீது

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன.

## மூன்று இராணுவம் பலி

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் மூன்று இராணுவத்தினர் இறந்ததாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

## நூற்றாண்டு விழாநிகழ்ச்சிகள்

யாழ். இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழா கலாசார நிகழ்ச்சிகள் இன்றுவியாழக்கிழமை காலை 8 00 மணிக்கு வண்ணைச் சிவன்கோயிலில் பூசையுடன் ஆரம்பமாகின்றது. அடுத்து 8.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழாக்கட்டட அத்திவாரப் பொருள்கள் வண்ணை சிவன் கோயிலில் இருந்து ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு 10.35 மணிக்கும் 11.47 க்கும் இடைப்பட்ட நேரத்தில் அத்திவாரம் இடப்படும்.

இந்த விழாவின் மாலை நேர நிகழ்ச்சியாக செல்வி ஜெயபாரதி யோகநாதனின் நடன நிகழ்ச்சியும் பொன் சுந்தரலிங்கத்தின் பாட்டும் இடம் பெறும்.

மேற்கொள்ளும் என்பது இராணுவ நிபுணர்களின் கருத்து ஆகும். அடுத்த நடவடிக்கையாக ஈராக்கிய வான்படையைச் செயற்படவிடாமல்தரையிலே வைத்து அழிக்கும் போர்த் தந்திரம் கையாளப்படும். மூன்றாவதாக சக்தி வாய்ந்த அமெரிக்க B-52 குண்டு வீச்சு விமானங்களைப் பாவித்து குவைத்திலுள்ள ஈராக்கின் நிலைகள்மீது சரமாரியாகக் குண்டுகள் பொழியப்படும். இந்த யுத்த நடவடிக்கைகளின் பின் அமெரிக்கா தலைமையிலான பல்லினப் படைகள் பல முனைகளில் ஈராக்கைநோக்கி நகரத் தொடங்கும்.

இதேவேளை ஈராக் வசம் அணுகுண்டு உள்ளதா என்ற ஐயப்படும் அமெரிக்க இராணுவ அவதானிகள் மத்தியிலும் தலைதூக்கியுள்ளன. அணுவாயுதம் இரு பகினால் தனை சதாம் ஹூசைன்விட்டுக் கொடுக்காமல் உள்ளார் எனவும் கருதப்படுகின்றது.